காயிதே மில்லத்

செ.திவான்

காயிதேமில்லத்

வரலாற்றுப் பேரறிஞர்

செ.திவான் M.A.,M.Phil.,

நூலாசிரியரின் 135வது நூல்

நூலின் தலைப்பு	:	காயிதேமில்லத்
பொருள்	:	வரலாறு
நூலின் ஆசிரியர்	:	செ. திவான்
மொழி	:	தமிழ்
பதிப்பு ஆண்டு	:	2022, மார்ச் 1
உரிமை	:	ஆசிரியருக்கே
பக்கங்கள்	:	40
அச்சிட்டோர்	:	நியூஸ்மேன் பப்ளிகேஷன்ஸ், மதுரை போன்:0452-4396667, 90803 30200
வடிவமைப்பு	:	ஐ. அப்துல் நசீர், 9489115236
விலை	:	ரூ. 40/-

உள்ளே.......

1. எண்ண அலைகள் 04
2. மில்லத் – சமுதாயம் 09
3. வாழ்க்கைக் குறிப்புகள் 10
4. ஒத்துழையாமை இயக்கத்தில் 22
5. காயிதேமில்லத் கையெழுத்து 32
6. இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தலைவர் 37

எண்ண அலைகள்

அகிலம் வியக்கும் தென்பாண்டிச் சீமையில் தென்னகத்தின் ஆகஸ்போர்டாம் பாளையங்கோட்டையில் 4.8.1971 இல் உதயமானது மஹான் சேக் சதக்கத்துல்லாஹ் அப்பா (ரஹ்) அவர்கள் திருப்பெயர் தாங்கிய கல்லூரி.

18.2.1972

இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தலைவர் கண்ணியத்திற்குரிய காயிதே மில்லத் இஸ்மாயில் சாஹிப் 18.2.1972இல் கல்லூரிக்கு அறிவியல் கட்டிட அறைகளைத் திறந்து வைத்திட வருகை தந்தார்கள். அடியேன் கல்லூரி துவங்கிய முதலாமாண்டில் புகுமுக வகுப்பில் (P.U.C.) வரலாற்று மாணவன்.

ஐம்பதாண்டுகளுக்கு முன் கிராமத்திலிருந்து வந்த எளியேன் அந்த மாபெருந் தலைவர் காயிதேமில்லத்தைப் பார்த்திட அருகில் சென்று தொட்டு மகிழ்ந்திடும் பாக்கியத்தை இறைவன் அருளால் அன்று பெற்றேன்.

காயிதேமில்லத் குறித்த நூல்கள்

“இந்தியாவின் பகைவர்கள் எங்களின் பகைவர்கள்; இந்தியாவைத் தாக்கும் நாட்டை எதிரியாகவே கருதுவோம்” என்று தேசப்பற்றுடன் வாழ்ந்திட்ட வரலாற்று நாயகர் காயிதேமில்லத் குறித்து சில நூல்கள் தமிழில் வெளிவந்துள்ளன.

ஜலால் ஜகரிய்யா

மணிவிளக்கு நூலகம் மதராஸ் முகவரியிலிருந்து காயிதேமில்லத்தைக் காணுங்கள் எனும் நூல் ஒரு ரூபாய் விலையில் 1960இல் 54 பக்கங்களில் வெளிவந்துள்ளது. இதன் ஆசிரியர் ஜலால் ஜகரிய்யா ஆவார்.

அ.க. ரிபாயி – 1983

எனது பிரியத்திற்குரிய அண்ணன் அ.க.ரிபாயி முன்னால் மாநிலங்களவை உறுப்பினர் மே 1983இல் காயிதேமில்லத் குறித்த நூலினைத் தந்தார்.

கவ்மின் காவலர்

1983 அக்டோபரில் அந்த நூல் மறுபதிப்பு கண்டது. பத்து ரூபாய் விலையில் 220 பக்கங்களில் வெளியான அற்புதமான நூல் காயிதே மில்லத் வரலாற்றை அறிந்துகொள்ள விரும்பும் இளம்தலைமுறையினர் அவசியம் படித்தறிய வேண்டிய நூல்.

ஏ. சாகுல்ஹமீது எம்.எல்.ஏ.

5.6.1983இல் ஏ.சாகுல் ஹமீது எம்.எல்.ஏ. (நெல்லை மாவட்ட முஸ்லிம் லீக் தலைவர்) காயிதே மில்லத் பேசுகிறார் என்று 96 பக்கங்களில் தமிழிலும், Quaid- e – Millat Speaks Madras Legislative Assemble Speeches *என்ற ஆங்கில நூலை 52 பக்கங்களிலும் வெளியிட்டார்கள்.*

ஜே.எம். சாலி

1995 ஜூனில் கண்ணியமிகு காயிதேமில்லத் என்ற நூலை ஜே.எம்.சாலி 40 ரூபாய் விலையில் 160 பக்கங்களில் தந்தார்கள். அந்த நூலினை 2014 ஆகஸ்டில் சில திருத்தங்களுடனும் சேர்ப்புகளுடனும் யுனிவர்ஸல் பப்ளிஷர்ஸ் 176 பக்கங்களில் மறுபதிப்பு செய்துள்ளது.

துபாஷ் சி.எஸ். தாஜூத்தீன்

இஸ்லாமிய இலக்கியக் கழகம் ஆகஸ்ட் 2003இல் துபாஷ் சி.எஸ். தாஜூத்தீன் எழுதிய 'காயிதே மில்லத் அரசியல் வரலாறு' எனும் 184 பக்கங்களைக் கொண்ட நூலினை 50 ரூபாய் விலையில் வெளியிட்டது.

பேராசிரியை சா.நசீமா பானு

கண்மணிகளுக்கு காயிதேமில்லத் எனும் 100 பக்கங்களைக் கொண்ட நூலினை பேராசிரியை சா.நசீமா பானு வெளியிட்டுள்ளார்கள்.

ஹிமானாசையத்

1998 இல் ஹிமானா சையத் காயிதேமில்லத் அனைவருக்கும் ஏற்புடைய அருமைத் தலைவர் எனும் 32 பக்கங்களில் ஏழு ரூபாய் விலையில் வெளியிட்டுள்ளார்.

டாக்டர் கே.எஸ். அன்வர் பாட்சா

கி.பி. 2006 இல் டாக்டர் கே.எஸ். அன்வர் பாட்சா கண்ணியத்திற்குரிய காயிதேமில்லத்தின் கருத்துரைகள் நாடாளுமன்ற – சட்டமன்ற – பத்திரிகை நேர்காணல் உரைகளின் தொகுப்பு என்னும் 256 பக்கங்களைக் கொண்ட நூலினை 70 ரூபாய் விலையில் வெளியிட்டுள்ளார்.

ஏ. மல்லிகா

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் Life history of Quaid – e – Millath Sahib – A Study *எனும் எம்.பில். ஆய்வேட்டை ஏ. மல்லிகா, 30.3.2006 இல் தந்துள்ளார்.*

எம். முஹம்மது தாஹாமதனி

அதிராம்பட்டினம் அருட்கவி அல்ஹாஜ் பிரியத்திற்குரிய அண்ணன் எம். முஹம்மது தாஹா மதனி, காயிதேமில்லத் பிள்ளைத் தமிழ் எனும் நூலை ஜூலை 2010 இல் 25 ரூபாய் விலையில் 78 பக்கங்களில் வெளியிட்டுள்ளார்.

வி. களத்தூர் பாரூக் – இலக்கியச் சோலை

காயிதேமில்லத் ஒரு சகாப்தம் எனும் நூலை சென்னை இலக்கியச்சோலை நிறுவனத்தார் 86 பக்கங்களில் 75 ரூபாய் விலையில் 2021 டிசம்பரில் வெளியிட்டுள்ளனர்.

சிகரம்

எல்லாவற்றிற்கும் சிகரம் வைத்தாற்போல கண்ணியத்திற்குரிய காயிதேமில்லத் நினைவுமலர் 1990 இல் வெளிவர அ.க. ரிபாயி அவர்களை ஆசிரியராகக் கொண்டு, வீரவநல்லூர் கவிஞர் எம். அப்துர் ரகுமான், பேராசிரியர் கே.பி. பீர் முஹம்மது சாகிப், கலீல் அஹமது மீறான், ரபியத்தீன் முஹம்மது ஹில்லி, ராஜா முஹம்மது, எம். உபையத்துல்லா சாகிப், ஆசிரியர் எம். பீர்முஹம்மது ஆகியோரின் ஒத்துழைப்போடு பணி நடைபெற்றது.

ஹாஜி எம். ஜமால் முஹம்மது சாஹிப்

பி.எஸ்.எம். செய்யது அப்துல் காதர் மலர்க்குழுத் தலைவராகவும், ஹாஜி எம். ஜமால் முஹம்மது சாஹிப்

செயலாளராகவும் இருந்து காயிதேமில்லத் நினைவு மலர்க்குழு முஸ்லிம் அனாதை நிலையம், காதிர்நகர், பாளையங்கோட்டை, டபுள் டிம்மி சைஸில் *456* பக்கங்களில் வெளிவந்தது.

எம்.எஸ். அஹமது ஜமால் சாஹிப்

முதலில் அறிவிக்கப்பட்ட மலர்க்குழுத் தலைவர் எம்.எஸ். அஹமது ஜமால் சாஹிப் மறைந்தார்கள். பொருளாராக எம்.பி.ஏ. ஜமால் முஹம்மது சாஹிப் பணிபுரிந்தார்கள்.

பேராசிரியர் கா. அப்துல் கபூர்

மலர்க்குழுவில் இடம்பெற்றவர்கள் பேராசிரியர் கா. அப்துல் கபூர், J.M.*மியாகான்*Ex. M.L.C., S.M.*முஸ்தபா, மௌலவி* M. *அப்துல் வஹாப் சாஹிப்,* M.S.M. *பாதுல் அஸ்ஹப் ஸாஹிப்,* A.S.M.*ஷேக்மைதீன் சாஹிப், மெக்கோ* M. *பக்கீர் மைதீன் சாஹிப்.*

கேப்டன் N.A. அமீர் அலி

அண்மையில் நம்மைவிட்டுப் பிரிந்த பாசமிகு அண்ணன் கேப்டன் N.A.*அமீர்அலி, சிக்கந்தர் சாஹிப், கீழக்கரை* S.M. *சலாஹூத்தீன் சாஹிப், பெரியகுளம் மௌலவி மதனி, கீழக்கரை* S.M. *தஸ்தகீர் சாஹிப்,* P.S.M.*ஹபீபுல்லா சாகிப், நாகூர்* S.M. *சாகுல்ஹமீது சாஹிப், அரங்கக்குடி* M.*அப்துல்காதர் சாஹிப், லெப்பைக்குடிக்காடு* F. *அன்வர்பாஷா சாஹிப், நாகூர் பசிபிக் முகைதீன் மரைக்காயர், ஹாஜி அப்துல் வஹாப் சாஹிப், காயல்பட்டினம் ஷேக் அப்துல் சாஹிப், பொறியாளர் கோட்டாறு ஜவாஹிர் சாஹிப், பசிபிக் ஹசன் மரைக்காயர், ஜனாப் காதர் பக்ஷ், கீழக்கரை ஜனாப் ஹூஸைன், ஜனாப் காசிம்ஃபக்கீர்,* S.M. *ஷேக்நூருத்தீன் சாஹிப் ஆகியோர் பெரிதும் முயன்று அந்த நினைவு மலர் வெளிவந்தது.*

ஏ.கே.ஏ. அப்துஸ் ஸமது

Quaid – E- Millath Muhammed Ismail Sahib A Brief Sketch *என்னும் 7 பக்கங்களைக் கொண்ட ஆங்கில நூலை ஏ.கே.ஏ. அப்துஸ்ஸமது வெளியிட்டுள்ளார்கள்.*

பேராசிரியர் பி. பீர்முஹம்மது

பேராசிரியர் பி.பீர்முஹம்மது Quaid – e- Millath Muhammad Ismail Sahib As a Parliamentarian *எனும் ஆங்கில நூலை 14 பக்கங்களில் வெளியிட்டுள்ளார்.*

நா.வை. சொக்கலிங்கம்

மறைந்த நண்பர் நா.வை.சொக்கலிங்கம் தனது பல்சுவை திங்கள் இதழான 'யாதும்ஊரே' 10.6.2005 இதழினை

கண்ணியத்தின் திருஉருவம்
கடமையின் சின்னம்
கன்னித்தமிழ்க்காவலர்
கண்ணியமிகு காயிதேமில்லத்

என்று குறிப்பிட்டு அட்டைப்படத்துடன் வெளியிட்டார்.

ஆலிமான் ஆர்.எம்.ஜியாவுதீன்

அன்புச் சகோதரர் ஆலிமான் ஆர்.எம். ஜியாவுதீன் சந்தன தலைவர்களின் சரித்திர சுவடுகள், சிறுநூலை 27 பக்கங்களில் 2007இல் வெளியிட்டு அடியேனுக்கு அனுப்பி தாங்கள் காயிதேமில்லத் பற்றி ஒரு நூல் எழுத வேண்டும் என்று கோரிக்கை வைத்தார்கள். எல்லாம் வல்ல அல்லாஹ்வின் கருணையால் 15 ஆண்டுகளுக்குப்பின் இச்சிறுநூல் பெருமகனார் காயிதேமில்லத் பற்றி இப்போது வெளிவருகிறது.

எளியேன் வாழ்வதற்காக எழுதவில்லை
எழுதுவதற்காகவே வாழ்கிறேன்
சாகும் வரை எழுதுவேன் சரித்திரத்தைக் காத்திட எழுதுவேன்
சர்வ வல்லமை கொண்ட இறை சக்தி தரட்டும்! சக்தி தரட்டும்!

செ.திவான்
1.3.2022

மில்லத் - சமுதாயம்

இளைய தலைமுறை அதிகம் அறிந்திராத மாபெரும் தலைவர் கண்ணியத்திற்குரிய காயிதே மில்லத்.

மில்லத் என்றால் சமுதாயம்
காயித் என்றால் வழிநடத்துபவர்
சமுதாயத்தை வழிநடத்துபவர் என்று
காயிதேமில்லத்திற்குப் பொருள்.

கண்ணியத்திற்குரிய காயிதே மில்லத்

நெஞ்சத்தை அகந்தையினால் நிரப்பி நின்றார்
நிலைகுலையச் செய்கின்ற வித்தை செய்து
வஞ்சத்தின் துணையாலே ஏய்த்து நின்ற
வல்லரக்கன் ஆதிக்கம் சாய்த்து, வென்று
அஞ்சி அஞ்சி அடிமை என வாழ்ந்த மக்கள்
ஆர்ப்பரித்து ஏழவைத்து உரிமைகாத்து
துஞ்சி நின்ற சமுதாயத்தை விழிக்கவைத்திட
தொண்டாற்றியவர் காயிதே மில்லத்.

புலியின் தன்மையைக் கைக்கொள்
புலியோ சுதந்திரத்தைத்தேடும்
சாவுவரினும் ஏற்கும்,

எனும் அல்லாமா இக்பாலின் கவிதை வரிகளுக்கேற்ப வாழ்ந்தவர் காயிதேமில்லத்.

மியாக்கான் – முகைதீன் பாத்திமா தம்பதியருக்கு நெல்லைச் சீமையில் பேட்டையில் 5.6.1896 இல் தோன்றி 5.4.1972 அதிகாலை 0.55 நிமிடங்களுக்கு மறைந்தவர் காயிதே மில்லத்.

காயிதேமில்லத் வாழ்க்கைக் குறிப்புகள்

5.6.1896	:	பிறப்பு
1898	:	தங்கை பாத்திமா பீவி பிறப்பு
15-6-1900	:	K.T.M.அஹமது இப்றாஹீம் சாஹிப் பிறப்பு
1903	:	தந்தை மியாக்கான் இராவுத்தர் மறைவு
1903	:	கடைசி சகோதரர் ஹாமீத் மியாக்கான் பிறப்பு
1909	:	பாலிய முஸ்லிம் சங்கம் ஆரம்பித்தல்
20,21 ஜூலை 1920	:	நெல்லையில் நடைபெற்ற மாகாண காங்கிரஸ் மாநாட்டில் இராஜாஜியுடன் ஒத்துழைத்து, பூர்ண சுதந்திரம் கோரும் தீர்மானத்தை நிறைவேற்றுதல்
1920	:	மஜ்லிஸுல் உலமா மூன்றாவது மாநாடு ஈரோட்டில் நடைபெற்ற பொழுது மௌலானா முஹம்மதலி, மௌலானா சௌக்கத் அலி ஆகியோரின் சந்திப்பு
1920-21	:	கிலாபத், ஒத்துழையாமை இயக்கங்களில் தீவிரப் பங்கு கொண்டு கல்லூரியைவிட்டு வெளியேறுதல்.
1921-1922	:	மதறாஸ் ஜமால் முஹைதீன் கம்பெனியில் பணியில் சேர்தல்.
1911-1923	:	ஜமால் ஹமீதா பீவியை திருமணம் முடித்தல்.
1010-1925	:	மகன் ஜமால் முஹம்மது மியாக் கான் பிறப்பு.
1927	:	மகள் பஹ்மீதா பிறப்பு - மரணம்.
1929	:	டில்லி ஜாமியா மில்லியா இஸ்லாமியா கல்வி கூடத்திற்கு விஜயம் செய்து டாக்டர் ஜாகீர் உசேன், மௌலானா முஹம்மதலி ஆகியோரைச் சந்தித்தல்.

1930 : முதலாவது வட்டமேஜை மாநாட்டிற்கு மௌலானா முஹம்மதலி புறப்பட்ட பொழுது, கராச்சி துறைமுகத்தில் ஹாஜி வி. ஜமால் முஹம்மது சாகிபும், காயிதே மில்லத்தும், மௌலானாவை வழியனுப்பி வைத்தல்.

1932 : சகோதரி பாத்திமாவின் கணவர் OCPSE முஹம்மது இப்றாஹீம் மாரணம்.

1927–1935 : இக்கால கட்டத்தில் இஸ்லாமிய சமுதாய, கலாச்சார, கல்வி நடவடிக் கைகளில் தீவிர ஈடுபாடு கொள்ளுதல், முஹம்மது மர்மடியூக் பிக்தாலை மதறாஸுக்கு வரவழைத்து சொற்பொழிகளுக்கு ஏற்பாடு செய்தல். அல்லாமா முஹம்மது இக்பாலை மதறாஸுக்கு அழைத்து சொற்பொழிவுக்கு ஏற்பாடு செய்தல். ஆண்டு தோறும் மீலாது சொற்பொழிவுகளுக்கு ஏற்பாடு செய்தது மௌலானா சுலைமான் நத்வி, மௌலானா அப்துல் அலீம் சித்தீக்கி போன்ற மார்க்க அறிஞர்களை அழைத்து பேச வைத்தல்.

: தென்னிந்திய முஸ்லிம் கல்விச் சங்கத்தின் துணைத்தலைவராகவும் மதறாஸ் அஞ்சுமனே ஹிமாயத்தே இஸ்லாம் (எத்தீம் கானா) சபையின் துணைத் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டு சுமார் 20 ஆண்டு காலம் அப்பொறுப்பில் இருத்தல்.

1936 : மதறாஸ் சட்டசபைக்கு நடைபெற்ற தேர்தலில், பொதுத் தொகுதியில் இருந்து போட்டியிட்ட ஹாஜி வி. ஜமால் முஹம்மது சாகிபு வெற்றி வாய்ப்பை இழந்து விடுதல், ''பெரும்பான்மை வகுப்பு வாதம்'' தலை தூக்கி நின்றதை நேரில் அனுபவித்தல்.

1937 : அகில இந்திய முஸ்லிம் லீக்கில் உறுப்பினராக சேர்தல்.

1938	:	மதறாஸ் ஜில்லா முஸ்லிம் லீக் தலைவராக தேர்ந்தெடுக்கப்படுதல்.
15–2–1939	:	தலைவரின் ஞானாசிரியர் நாகூர் செய்யது அப்துல்லா மௌலானா மரணம். அப்போது அவர்களது வயது *82*.
1939	:	மதறாஸ் ஜமால் முஹைதீன் கம்பெனி நஷ்டமடைந்து வியாபாரத்தை நிறுத்திக் கொண்டது.
14–9–1939	:	அதுவரை எக்மோர் ''டிவோனியா ஹவுஸ் பங்களாவில் வசித்து வந்த தலைவரவர்கள் பெரம்பூருக்கு ஜாகையை மாற்றிக் கொள்ளல்.
12–15 ஏப்ரல் *1941*	:	அகில இந்திய முஸ்லிம் லீக் மாநாடு காயிதே ஆஜம் முஹம்மதலி ஜின்னா சாஹிப் தலைமையில் மதறாஸில் நடைபெறுதல்
1940–42	:	பெரம்பூர் நெடுஞ்சாலையில் வாடகை வீட்டில் தங்கியிருத்தல்.
1942–43	:	குடும்பம் பேட்டைக்கு அனுப்பப்படுதல்.
1944	:	தங்கை பாத்திமா பீவி மரணம்.
1945	:	மதறாஸ் சட்டசபைக்கு , மதறாஸ் நகர தனித் தொகுதியிலிருந்து போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்படுதல்.
ஆக,*1945*	:	மதறாஸ் சட்டசபை முஸ்லிம் லீக் கட்சி தலைவராக தேர்ந்தெடுக்கப்படுதல். சட்டசபையில் எதிர்க்கட்சித் தலைவராக அங்கீகரிக்கப்படுதல்.
ஆக,*1945*	:	மதறாஸ் மாகாண முஸ்லிம் லீக் தலைவராக தேர்ந்தெடுக்கப்படுதல்.
1944–1949	:	சாந்தோம் நெடுஞ்சாலையில் வாடகை வீட்டில் குடியிருத்தல்.

ஏப்ரல் 1946	:	டில்லியில் நடைபெற்ற அகில இந்திய முஸ்லிம் லீக் கன்வென்ஷன் கூட்டத்தில் (மத்திய, மாநிலங்களில் உள்ள முஸ்லிம் லீக் சட்டசபை உறுப்பினர்கள் கூட்டம்) ஒரு சந்தர்ப்பத்தில் காயிதே மில்லத்தை அக்கூட்டத்திற்குத் தலைமை தாங்கும்படி காயிதே ஆஜம் ஜின்னா சாஹிப் பணித்தல்.
9–6–1947	:	அகில இந்திய முஸ்லிம் லீக் பொதுக்குழுவில் கலந்து கொண்டது மௌண்ட் பேட்டன் பிரபு திட்டம் இப்பொதுக் குழுவில் ஏற்றுக் கொள்ளப்பட்டது.
ஜூலை 1947	:	சென்னையில் ''முஸ்லிம்'' என்ற பெயரில் தமிழ் தினசரியை ஆரம்பித்தல் . . . .
15–8–1947	:	நாடு சுதந்திரம் பெற்றது. சென்னை கோட்டையில் நடைபெற்ற சுதந்திர தின விழாவில் கலந்து கொள்ளுதல்.
13,14 டிசம்பர் 1947	:	கராச்சியில் நடைபெற்ற அகில இந்திய முஸ்லிம் லீக் பொதுக் குழுவில் கலந்து கொள்ளுதல், இந்தியாவில் செயல்படவிருக்கும் முஸ்லிம் லீக்கின் கன்வீனராகத் தேர்ந்தெடுக்கப்படுதல்.
30–1–1948	:	காந்திஜி, கோட்சேயினால் சுட்டுக் கொல்லப்படுதல்.
1–2–1948	:	முஸ்லிம் நேஷனல் கார்டு என்ற தொண்டர் படைக்கு தடை விதிக்கப்படுதல், அத்தொண்டர் படையை காயிதே மில்லத் கலைத்து விடுதல்.
10–3–1948	:	மதறாஸ் இராஜாஜி ஹாலில் நடைபெற்ற அகில இந்திய முஸ்லிம் லீக் பொதுக்குழு கூட்டத்தில் 'இந்திய யூனியன் முஸ்லிம் லீக்'' என்ற பெயரில் கட்சியை தொடர்ந்து நடத்த முடிவெடுத்தல். அதன் தலைவராக காயிதே மில்லத் தேர்ந்தெடுக்கப்படுதல்.

செப்டம்பர் 1948 : ஹைதராபாத் சமஸ்தானத்தின் மீது போலீஸ் நடவடிக்கை எடுக்கப்பட்டு அப்பகுதி இந்தியாவுடன் இணைக்கப்பட்டதை ஆதரித்தும் பாராட்டியும் பேசியது.

1948 : கள்ளிக்கோட்டை அருகில் பெரோக்கில் பாரூக் கல்லூரி ஆரம்பிக்கப் படுதல்.

11.5.1949 : பிரைமரி அமைப்புகளும், ஜில்லா அமைப்புகளும் செயல்பட வேண்டிய விதம் குறித்தும், ஆக்கபூர்வமான செயல்திட்டங்களை அமல் படுத்துவது குறித்தும் காயிதேமில்லத் சுற்றறிக்கை அனுப்புதல்.

1949– 1956 வரை : ராயப்பேட்டையில் புதுப்பேட்டை கார்டன் தெருவில் வாடகை வீட்டில் குடியிருத்தல்.

5.6.1950 : ஆடுதுறையில் மாமனார் M.J. அப்துல்லா சாஹிப் மரணம்.

1950–1951 : சென்னையில் புதுக்கல்லூரி ஆரம்பிக்கப்படுதல்.

21.6.1951 : சென்னை ராயப்பேட்டை இல்லத்தில் வைத்து மகன் மியாக்கான் திருமணம்.

1.9.1951 : இந்திய யூனியன் முஸ்லிம் லீக்கின் பொதுக்குழு மதறாஸில் கூடி, சப் கமிட்டியினால் தயாரிக்கப்பட்ட கட்சியின் நோக்கங்களையும் சட்ட, திட்டங்களையும் அங்கீகரித்தல்.

பிப். *1952* : இந்திய நாட்டில் முதலாவது பொதுத்தேர்தல் நடைபெறுதல்.

ஏப்.*1952* : சென்னை மாகாண சட்டசபையிலிருந்து டில்லி ராஜ்யசபைக்கு தேர்த்தெடுக்கப்பட்டு *1958* மார்ச்சு முடிய அச்சபையில் அங்கம் வகித்தல்.

1952 : நாட்டு விடுதலைக்குப் பின்னர் முதன் முதலாக முஸ்லிம் லீக் போட்டியிட்ட சென்னை மாநகராட்சி தேர்தலில் துறைமுகம் வட்டத்தில் இருந்து டாக்டர் அஸீஸுத்தீன்

கடும் போட்டியையும் எதிர்த்து வெற்றி வாகை சூடினார்.

25.7.1953 : இராஜாஜி மந்திரி சபைக்கு முஸ்லிம் லீக் ஆதரவளித்து அதைக் காப்பாற்றுதல் ஆந்திர மாநிலத்தின் தலைநகராக கர்னூல் நகர் தற்காலி மாக் இருக்க வேண்டும் என்ற தீர்மானம் முஸ்லிம் லீக் உறுப்பினர்களின் ஆதரவினால் தான் நிறைவேறியது.

1.10.1953 : சென்னை மாகாணத்திலிருந்து ஆந்திரா மாநிலம் தனியாகப் பிரிந்து செல்லுதல்.

1954 : சென்னை, திருச்சி கல்லூரிகள் வளர்ச்சிக்காக மலேயா, சிங்கப்பூர், பர்மா ஆகிய தூர கிழக்கு நாடுகளில் சுற்றுப்பயணம் செய்தல்.

1..8.1954 : குடியாத்தம் உபதேர்தலில் முதலமைச்சர் காமராஜை முஸ்லிம் லீக் ஆதரித்து வெற்றி பெறச் செய்தல்.

1954 : கள்ளிக்கோட்டையில் நடைபெற்ற கேரள மாநில முஸ்லிம் லீக் மாநாட்டிற்கு தலைமை வகித்தல்.

25.4.1955 : குரோம்பேட்டையில் ஐந்து கிரவுண்டு நிலத்தை ரூபாய் இரண்டாயிரத்திற்கு கிரயம் வாங்குதல். (பத்திரம் நம்பர்கள் *638* of *55–639* of *55*)

24.12.1955 : மொழிவாரியாக மாகாணங்கள் பிரிக்கப்படுவதை எதிர்த்து ராஜ்ய சபையில் கருத்து தெரிவித்தல்.

9.2.1957 : தாயார் முஹைதீன் பாத்திமா பீவி தங்களது 85வது வயதில் மறைவு

26.5.1957 : குரோம்பேட்டை வீட்டிற்கு குடி புகுதல்.

11,12 ஜன. 1958 : திருச்சியில் முஸ்லிம் லீக் ஊழியர் மாநாடு காயிதே மில் சியில் முஸ்லிம் லீக் ஊழியர் மாநாடு காயிதே மில்லத் தலைமையில் சீரும் சிறப்புமாக நடைபெறுதல்.

4.2.1958 : மூத்த சகோதரர் முஹம்மது அப்துல் லத்தீப் சாஹிப் மரணம்.

1959 துவக்கம் :

சிராஜுல் மில்லத் அப்துஸ் ஸமது சாகிப் மூலமாக அறிஞர் அண்ணா அறிமுக மாதலும் அவ்வுறவு வலுப்படுதலும்.

17,18 செப். *1960:*

சென்னையில் தமிழ்நாடு மாநில முஸ்லிம் லீக் மாநாடு சீரும் சிறப்புமாக நடைபெறுதல். புதிதாக உறுப்பினர் சேர்த்து மாநில அமைப்பைஉருவாக்கத் தீர்மானித்தல்.

செப்.*1960* : தி. மு. க. மேயராக அப்துல் காதர் இருந்தபோது காயிதே மில்லத்துக்கு மாநகராட்சி சார்பாக வரவேற்பளித்தல்.

நவம்பர் கடைசி வாரம் *1961* :

தயா மன்ஸில் வீட்டில் வைத்து, கலைஞர் மு. கருணாநிதியை காயிதேமில்லத்திற்கு அறிஞர் அண்ணா அறிமுகப்படுத்துதல்.

22.11.1961 : சென்னை மரைக்காயர் லெப்பைத் தெரு 8ம் நம்பர் கட்டிடம் கட்சிக்காக நீதிமன்ற ஏலம் மூலம் கிரையம் வாங்கப்படுதல்.

உரிமைக்குரல்

11.12.1961 : அதிகாரப் பூர்வமான வார ஏடாக "உரிமைக் குரல்" ஆரம்பித்தல்.

நாடாளுமன்ற உறுப்பினராக

மார்ச் 1962 : கேரளா மாநிலம் மஞ்சேரி தொகுதியிலிருந்து லோக்சபாவிற்கு முதல் முறையாக தேர்ந்தெடுக்கப்படுதல்.

27..71962 : மனைவி ஜமால் ஹமீதா பீவி மறைவு.

22.8.1962	:	டில்லியில் அசோக் மேத்தா விசாரணை கமிட்டி முன்பு ''வகுப்பு வாதம்''என்ற விஷயம் குறித்து சாட்சியம் அளித்தல்.
21.10.1962	:	குரோம்பேட்டையில் தொழுகைப் பள்ளிவாசல் காயிதே மில்லத் அவர்களால் அடிக்கல் நாட்டப்படுதல்.
அக்.1962	:	இந்தியாவின் வட எல்லையில் செஞ்சீனா தாக்குதல், அதை எதிர்த்து காயிதே மில்லத் கண்டனம் தெரிவித்தல். தமது மகனை போருக்கு அனுப்ப தயாரானதுடன் தங்களது பாராளுமன்ற சம்பளத்திலும் ஒரு பகுதியை யுத்த நிதிக்காக தொடர்ந்து அளித்து வர முடிவு செய்தல்.
4.11.1962	:	திருச்சி காட்டூரில் சென்னை மாநில முஸ்லிம் லீக் பொதுக்குழு கூடி புதிய நிர்வாகிகளை தேர்ந்தெடுத்தல் . காயிதே மில்லத் மீண்டும் மாநிலத் தலைவராக தேர்ந்தெடுக்கப்படுதல்.
6.5.1963	:	நீதிமன்ற அதிகாரிகளினால் மரைக்காயர் லெப்பை தெருவிலுள்ள 8ம் நிர் கட்டிடம், முஸ்லிம் லீக் நிர்வாகிகளிடம் ஒப்புவிக்கப்படுதல்.
டிச. 1963	:	சென்னையில் நடைபெற்ற தமிழ்நாடு மாநில முஸ்லிம் லீக் பொதுக்குழு கூட்டத்தில், தி.மு.க. பிரிவினைக் கொள்கையை கைவிட்டதை வரவேற்று தீர்மானம் நிறைவேற்றுதல்.
1962	:	திராவிட முன்னேற்றக் கழகமும், முஸ்லிம் லீக்கும் முதல் தடவையாக தேர்தலில் கூட்டு அமைத்து சட்டசபை தேர்தலில் போட்டியிட்டது. இத்தேர்தலில் 50 இடங்களில் தி. மு. க. வெல்லுதல்
ஜன.1963	:	வேலூரில் நடைபெற்ற வட ஆற்காடு மாவட்டம் முஸ்லிம் லீக் மாநாட்டில் காயிதேமில்லத்தோடு அறிஞர் அண்ணாவும் ராஜாஜியும் ஒரே மேடையில் காட்சியளித்தல்.

8.5.1963 : மரைக்காயர் லெப்பைத் தெரு கட்டிடக்கிலிருந்து தமிழ்நாடு மாநில முஸ்லிம் லீக் தலைமை செயலகம் செயல்படத் துவங்குதல்.

1963 : சென்னை மாநகராட்சிக்கு நடைபெற்ற தேர்தலில் முஸ்லீம் லீக் சார்பாக 4 உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுதல்.

6.4.1964 : கடைசி சகோதரர் ஹாமீத் மியாக்கான் மரணம்.

ஏப்.*1964* : இந்திய யூனியன் முஸ்லிம் லீக்கின் பொதுச்செயலாளராக இப்றாஹீம் சுலைமான் சேட் M. P. தேர்ந்தெடுக்கப்படுதல்.

24.5.1964 : பாரதப் பிரதமர் பண்டித நேரு மரணம்.

8.9.1964 : லக்னோ நகரில் டாக்டர் செய்யது மஹ்மூத் தலைமையில் கூடிய மஜ்லிஸே முஷாவிராத் அமைப்புகூட்டத்தில் பங்கெடுத்துக் கொள்ளுதல். அதைத் தொடர்ந்து வட மாநிலங்களில் சுற்றுப் பயணம் செய்தல்.

1964 : தமிழ்நாட்டில் 60 நகரசபைகளுக்கு நடைபெற்ற தேர்தலில் முஸ்லிம்லீக் சார்பாக 64 உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுதல்.

3.1.1965 : ஹிந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் கைது செய்யப்பட்ட மாணவர்களை விடுதலை செய்யும்படியும் இப்பிரச்சினை குறித்து அனைத்துக் கட்சி ஆலோசனைக் கூட்டத்தை கூட்டும் படியும் பிரதமர் லால்பகதூர்சாஸ்திரிக்கு தந்தி அனுப்புதல்.

ஜன.*1965* : திருமதி இந்திரா காந்தி பாரதப் பிரதமராக பதவியேற்றல்.

20.3.1965 : ஹஜ் கடமையை நிறைவேற்றச் செல்லும் காயிதே மில்லத்திற்கு மதறாஸ் மாவட்ட முஸ்லிம் லீக் சார்பாக மரைக்காயர் லெப்பை

தெரு அலுவலகத்தில் வைத்து விருந்து உபசாரம்; அறிஞர் அண்ணாவும் கலந்து கொள்ளுதல்.

21.3.65 : சென்னையிலிருந்து விமானம் மூலமும் ஹஜ் கடமையை நிறைவேற்ற பம்பாய் பயணம்.

27.3.65 : பம்பாயிலிருந்து ஜித்தாவுக்கு விமானப் பயணம்.

6.5.65 : ஹஜ் கடமையை நிறைவேற்றிய பின் விமானம் மூலம் பம்பாய் திரும்புதல்.

11.5.65 : ரயில் மூலம் சென்னை வருகை.

பாகிஸ்தானுக்கு கண்டனம்

செப். *1965* : **பாரதத்தின் மீது பாகிஸ்தான் போர் தொடுத்தல். காயிதே மில்லத் கண்டனம் தெரிவித்தல்.**

1965–66 : சென்னை மாநகராட்சியில் துணை மேயர் பதவி முஸ்லிம் லீக்குக்கு அளிக்கப்படுதல்.

பிப்,*1967* : மஞ்சேரி தொகுதியிலிருந்து இரண்டாவது முறையாக லோக்சபாவிற்கு காயிதே மில்லத் தேர்ந்தெடுக்கப்படுதல்.

பிப். *1967* : தமிழ்நாடு சட்டசபை தேர்தலில் தி.மு.க முஸ்லிம் லீக் கூட்டணி வெற்றி பெறுதல். அறிஞர் அண்ணா முதலமைச்சர் ஆகுதல். முஸ்லிம் லீக் சார்பாக மூன்று எம். எல். ஏ.க்கள் தேர்ந்தெடுக்கப்படுதல்.

1967–1968 : சென்னை மாநகராட்சி மேயர் பதவி முஸ்லிம் லீக்கிற்கு அளிக்கப்படுதல்.

ஜன.*1968* : சென்னையில் நடைபெற்ற உலகத் தமிழ் மாநாட்டில் கலந்துகொள்ளுதல். அம்மாநாட்டின் ஒரு பகுதியாக 9.1.68 அன்று நடைபெற்ற 'அரபு நாடுகளுடன் தமிழர்களின் தொடர்பு' என்ற கருத்தரங்கத்திற்கு காயிதே மில்லத் தலைமை வகித்தல்.

26.1.1968	:	சென்னை மவுண்ட்ரோட்டில் (அண்ணா சாலை) காயிதேமில்லத்சென்றகார் விபத்துக்குள்ளாகுதல். இராயப்பேட்டை மருத்துவ மனையில் காயிதே மில்லத் 20 நாட்கள் சிகிச்சை பெறுதல்.
செப் *1969*	:	செப்டம்பர் 1969 வங்கிகள் தேசிய மயமாக்கப்பட்டதை முஸ்லிம்லீக் ஆதரித்தல்.
1969	:	ஜனாதிபதி தேர்தலில் வி. வி. கிரியை ஆதரித்து முஸ்லிம் லீக் வாக்களித்ததினால் அவர் வெற்றி பெறுதல்.
31.1.1970	:	K. T. M. அஹமது இப்றாஹீம் சாகிப் மரணம்.
20.9.1970	:	திரு பாலசுந்தரம் திமுக மேயராக சென்னை மாநகராட்சியில் செயலாற்றியபொழுது காயிதே மில்லத்திற்கு மாநகராட்சி சார்பாக வரவேற்பு நல்கப்படுதல்.
22.10.1970	:	நெல்லை மாவட்டம் குற்றாலத்தில் தமிழ்நாடு மாநில முஸ்லிம் லீக் பொதுக்குழு கூடுதல் புதிய மாநில நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்படுதல். காயிதே மில்லத் மீண்டும் தலைவராகுதல்.
1970	:	மன்னர் மானிய ஒழிப்பை திருமதி. இந்திரா காந்தி கொண்டு வந்த பொழுது முஸ்லிம் லீக் அதை ஆதரித்தல்.
1971 மார்ச்	:	மேற்கு வங்காளத்தில் முஸ்லிம் லீக் உடன் கூட்டுச் சேர்ந்து காங்கிரஸ் போட்டியிட்டதனால் அம்மாநிலத்தில் ஆட்சியைக் கைப்பற்றியது. S.S. ரே தலைமையில் அமைக்கப்பட்ட காங்கிரஸ் மந்திரி சபையில் 2 முஸ்லிம் லீக் அமைச்சர்கள் அங்கம் வகித்தல், ஏழு எம்.எல்.ஏக்கள் முஸ்லிம் லீக் சார்பாகத் தேர்ந் தெடுக்கப்படுதல்.
1970–71	:	சென்னை மாநகராட்சியில் துணை மேயர் பதவி முஸ்லிம் லீக்குக்கு அளிக்கப்படுதல்.
23.3.1971	:	டில்லி பிரதேச முஸ்லிம் லீக் அமைப்பாளராக ஹக்கீம் மஹ்மூது அஹமது கான் நியமனம்

செய்யப்பட்டார். (காங்கிரஸ் மகாசபையின் தலைவராகப் பணியாற்றிய காலஞ்சென்ற ஹக்கீம் அஜ்மல்கான் அவர்களது பேரர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது.)

8.1.1971 : தலைவரவர்களின் உற்ற நேசரும் சஹாவும் ஆன காயல்பட்டணம் M.K.S. முஹைதீன் இப்றாஹீம் சாகிபு (B. A. காக்கா) மரணம்

பிப்.1971 : மஞ்சேரி தொகுதியிலிருந்து 3 வது முறையாக லோக் சபாவிற்கு தேர்ந்தெடுக்கப்படுதல்.

10.8.1971 : லோக்சபையில் காயிதே மில்லத் கடைசியாக பேசிய நாள். இந்திய சோவியத் நட்புறவு உடன்படிக்கையை வாழ்த்திப் பேசினார்கள்.

கடைசி நிகழ்ச்சி

12.11.71 : காயிதேமில்லத் கலந்துகொண்ட கடைசி பொது நிகழ்ச்சி – சென்னை வியாசர்பாடி பர்மா முஸ்லிம் பள்ளி வாசல் மதரஸாவுக்கு அடிக்கல் நாட்டுதல். இன்று அப்பள்ளிவாசல் "காயிதே மில்லத் ஜிம்–ஆ பள்ளி" என அழைக்கப்படுகிறது.

12.11.71 : அன்று மாலையே விமானம் மூலம் டில்லி பயணம்.

12.11.71 (நடுநிசி) : டில்லியில் வைத்து நோய்வாய்ப்பட்டு விலிங்டன் மருத்துவமனையில் 13ம் தேதி காலையில் அனுமதிக்கப்படுதல்.

12.12.1971 : பேத்தி ஹிபத்துல் கரீம் பாத்திமாவின் திருமணம்.

டிச.1971 : பங்களாதேஷ் வகைக்காக இந்திய அரசாங்கம் மேற்கொண்ட யுத்தத்திற்கு ஆதரவளித்தல்.

ஜன.1972 : டில்லி மெட்ரோபாலிட்டன் சபைக்கு நடைபெற்ற தேர்தலில் முஸ்லிம் லீக் சார்பாக போட்டியிட்ட டாக்டர் அஹ்மது முஹம்மது வெற்றி பெறுதல்.

5.4.1972 (0.55 a.m) : இறைவனின் நாட்டப்படி அவனது அளவில் சென்றடைந்த நாள்.

ஒத்துழையாமை இயக்கத்தில்

1920 ஜூலை 21, 22 நாட்களில் திருநெல்வேலி நகரில் காங்கிரஸ் கட்சி மாநாடு. மிதவாதியான எஸ். சீனிவாச அய்யங்கார் தலைமை. அண்ணல் காந்தியடிகளின் அறிவிப்பை ஏற்று ஒத்துழையாமை இயக்கமும், கிலாபத் போராட்டமும் உச்சகட்டத்தில் இருந்த வேளை.

அன்னிபெசன்ட் அம்மையாரும் சி.பி. இராமசாமி அய்யரும் மிதவாதிகள். சேலம் சி.விஜயராகவாச்சாரியார், எம்.கே. ஆசாரியா, எஸ்.சத்தியமூர்த்தி, வி.கே. ராமானுஜாச்சாரி ஆகியோர் கலந்துகொண்ட திருநெல்வேலி மாநாடு.

சக்கரவர்த்தி ராஜாஜி

மாநாட்டில் பங்கேற்ற சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார், டி. ஆதி நாராயண செட்டியார், எஸ்.கிருஷ்ணசாமி சர்மா ஆகியோர் மாநாட்டில் ஒத்துழையாமை இயக்க தீர்மானத்தை நிறைவேற்ற வற்புறுத்தினார்கள்; வாதாடினார்கள். K.T.M. அஹமது இப்ராஹிம், காயிதேமில்லத் நெல்லை, பேட்டை, மேலப்பாளையம் பகுதி முஸ்லீம்களை பெருமளவில் திரட்டினார்கள்.

22.7.1920

சென்னை கிலாபத்தின் நேசன் யாகூப் ஹசன் 22.7.1920இல் அரசியல் தீர்மானத்தை முன்மொழிந்தார்கள். மிதவாதிகள் ஆர்வங்காட்டவில்லை. கண்ணியத்திற்குரிய காயிதேமில்லத் அந்த தனது 24வது வயதில் அந்த மாநாட்டில் பங்கேற்று ஒத்துழையாமை இயக்கத் தீர்மானம் நிறைவேற ஒத்துழைத்தது வரலாறு.

கல்லிடைக்குறிச்சி

திருநெல்வேலி மாநாடு முடிந்ததும், கல்லிடைக்குறிச்சியில் தொடர்ந்து மாநாடு மிதவாதிகளால் நடத்தப்பட்டதும் சீனிவாச அய்யங்கார், கஸ்தூரிரங்க அய்யங்கார், சத்தியமூர்த்தி ஆகியோர் பங்கேற்றதும், ஒத்துழையாமை குறித்து அந்த மாநாட்டில் தீவிரங்காட்டாததும் வரலாற்றில் மறைந்துள்ள

பக்கங்களைப் பார்க்க: 21.6.1920 சமர்ப்பிக்கப்பட்ட போலீஸ் அறிக்கை 713 (S.A. 235/4 Special Branch C.I.D.) 1920 Ist Fortnightly Reports *சென்னை. தமிழக ஆவணக் காப்பகம்.*

Mr. Rajagopalachari is busily engaged for the last 3 or 4 days in visiting Muhamadans and inducing them to attend the provincial conference in large body.

The President refused to commit him self to non – co - operation and most – of the Hindu leaders are understood to be against it, favor of the logical results with regard to themselves and though a resolution in favor of the policy of Gandhi and shaukat Ali, Proposed by Mr. Yakoob Hasan was carried, this result is regarded as due to the exertions of C.Rajagopalahariar in bringing in a lot of Muhamadans to vote.

இளமையிலே நாட்டுப்பற்று

அதிக அளவில் முஸ்லிம்கள் நெல்லை காங்கிரஸ் மாநாட்டில் ராஜாஜியின் ஒத்துழையாமை இயக்கத் தீர்மானத்திற்கு ஆதரவாக வாக்களித்த வரலாறு தமிழக அரசின் ஆவணக் காப்பங்களில் இருக்கிறது. காயிதேமில்லத் இஸ்மாயில் சாஹிப்பின் இளமையிலே ஊற்றெடுத்துவிட்ட நாட்டுப்பற்றை அது நாட்டுக்கு அறிவித்துக் கொண்டிருக்கிறது.

கல்லூரிப் படிப்பைத் துறத்தல்

மாணவர்கள் தங்களது கல்லூரி பள்ளிப்படிப்பை துறத்தல் வேண்டுமென்ற காந்தியடிகளின் கோரிக்கையை ஏற்று சென்னை கிறிஸ்தவ கல்லூரியின் பி.ஏ. பட்டப் படிப்பை படித்துக் கொண்டிருந்த காயிதேமில்லத் அதனைப் பாதியிலே தூக்கியெறிந்துவிட்டு நாட்டு விடுதலைப் போரில் பங்கேற்றார்.

சட்டமன்ற உறுப்பினராக காயதேமில்லத்

1946இல் சென்னை ராஜதானி முஸ்லிம்களுக்காக ஒதுக்கப்பட்ட தனித்தொகுதியில் காயிதேமில்லத் போட்டியின்றி வெற்றிபெற்றார். எம்.எஸ். அப்துல் மஜீத் (தென்ஆற்காடு – செங்கல்பட்டு), மு.ந. அப்துல் ரஹ்மான் (திருநெல்வேலி), எம்.எஸ். அத்தாவுல்லா (சேலம் – கோவை – நீலகிரி), பேகம் சுல்தான் மீர் அமீருத்தீன் (சென்னை – பெண்கள் தொகுதி),

மௌலவி எஸ்.ஏ.எப். இப்ராஹிம் சின்ன ஹாஜியார் (மதுரை – போட்டியின்றி தேர்வு). என். முகம்மது அன்வர் சாகிப் – வடஆற்காடு, எம்.ஏ. முஹம்மது இப்ராஹிம் – திருச்சி. கான் சாகிப் – இராமநாதபுரம். இவர் மறைந்த பின் லெப்பை குடிக்காடு மௌலவி அப்துல் காதர் ஜமாலி வெற்றிபெற்று சுதந்திர இந்தியாவின் முதல் முஸ்லிம் எம்.எல்.ஏ. என்ற பெருமை பெற்றார். அப்போது 29 முஸ்லிம் லீக் எம்.எல்.ஏ.க்கள் மலப்புரம், ஆந்திரம் உள்ளிட்ட சென்னை ராஜதானியில் இருந்தார்கள். இதில் ஒருவர் காயிதேமில்லத் ஆவார்.

எதிர்க்கட்சித் தலைவராக காயிதேமில்லத்

இராஜபாளையம் பி.எஸ்.குமாரசாமி ராஜா சென்னை மாகாண முதல்வராக இருந்த காலத்தில் காயிதேமில்லத் சட்டமன்ற முஸ்லிம் லீக் கட்சித்தலைவர், சென்னை மாகாண எதிர்க்கட்சித் தலைவராகவும் பணியாற்றினார்கள்.

இந்தியத் திருநாட்டின் விடுதலை

1947 ஆகஸ்டு 15இல் இந்தியத் திருநாடு இந்து – முஸ்லிம் – கிறிஸ்தவ – சீக்கிய இன்ன பிற மதத்தவர்கள் அனைவரும் சேர்ந்து போராடி அண்ணல் காந்தி தலைமையில் அகிம்சையுடனும் வங்கத்துச் சிங்கம் நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் தலைமையில் வீரத்துடனும் போராடியதால் நாடு விடுதலை பெற்றது.

கராச்சிக் கூட்டம் கொள்கை முடிவு

1947 டிசம்பர் 13, 14 தேதிகளில் முஸ்லிம்லீக் கவுன்சில் கூட்டம். இந்திய சுதந்திரப் போரில் மௌலானா முகமதலி, மௌலான சவுக்கத் அலி, சாரதா பீட சங்கராச்சாரியார் III ஸ்ரீ சந்திரசேகரபாரதி ஆகியோர் மீது கராச்சியில் 1928இல் பந்தர் ரோட்டில் 'காலித்தினா' ஹாலில் விசாரணை நடைபெற்ற அதே அரங்கத்தில். சென்னை மாகாணத்திலிருந்து 20 உறுப்பினர்கள் அப்போது சென்னையில் விமானச்சேவை சிறிய அளவிலே. 22 பேர்களே பயணிக்கும் டக்கோட்டா விமானம், 5 பேர்களுக்கு மாத்திரமே விமானத்தில் இடம். அதில் காயிதேமில்லத், கே.டி.எம். அஹமது இப்ராஹிம் எம்.எல்.சி., மலபார் சீத சாஹிப் எம்.எல்.ஏ., எம்.எம். அஹமது எம்.எல்.ஏ., ஏ.கே.

ஜமாலி எம்.எல்.ஏ. ஆகியோர் ஹைதரபாத், பம்பாய் (மும்பை) வழியாக, கராச்சிக்குச் சென்றார்கள். அங்கு அவர்களுக்குச் சிறப்பான வரவேற்பு.

காயிதே ஆஜம் ஜின்னா

முஸ்லிம் லீக் கவுன்சில் கூட்டம். காயிதே ஆஜம் முகமதலி ஜின்னா தலைமையில். **ஆஜம் என்றால் உயர்வான – கண்ணியமான என்று பொருள்.** *30 நிமிடங்கள் துவக்க உரை ஆற்றினார் ஜின்னா. மறுநாள் நிறைவுரை 2 மணி நேரம். அதற்குப் பின்னர் அவர் கூட்டங்களில் பேசவேயில்லை.*

இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தலைவர்

அந்தக் கூட்டத்தில் 1906இல் துவங்கிய முஸ்லிம் லீக் இந்தியாவிலும் – பாகிஸ்தானிலும் தனித்தனியாக இயங்கிட முடிவாயிற்று. பாகிஸ்தான் பிரதமர் லியாகத் அலிகான் அங்கு தலைவர். இந்தியாவில் கட்சித் தலைமைக்கு உத்திரப்பிரதேச சட்டப்பேரவை முஸ்லிம் லீக் கட்சித்தலைவர் ரிஸ்வான் சாஹிபும், காயிதே மில்லத்தும் போட்டியிட்டனர். ஜின்னா ஓட்டெடுப்பிற்கு உத்திரவிட்டார். ரிஸ்வான் 28 வாக்குகள் வாங்கினார். காயிதே மில்லத் பெற்றது 413 வாக்குகள், தலைவர் ஆனார் காயிதே மில்லத்.

பணம் வாங்க மறுப்பு

ஹபீப் வங்கியில் முஸ்லிம் லீக் கட்சிக்கு இருப்புத் தொகை ரூ. 40 இலட்சம். **அதில் இந்தியாவிற்குரிய பங்கு ரூ. 17 இலட்சம். அந்தத் தொகையை காயிதேமில்லத்திடம் அளிக்க முன்வந்தபோது அதனை வாங்கிட மாட்டோம் என்று மறுத்த மாண்பாளர் காயிதேமில்லத்.** *பின்னாளில் கவர்னர் ஜெனரலாக இருந்த ராஜாஜி, காயிதேமில்லத்திடம் 'தம்பீ, அந்தப் பணத்தை இந்தியாவிற்கு கொண்டு வரவேண்டுமே' என்றபோது 'அந்தப் பணத்தைப் பெற்றுக்கொள்ளும் எண்ணம் துளியளவு கூட என் உள்ளத்தில் இல்லை' என்று உரைத்திட்ட உத்தமர் காயிதே மில்லத்.*

பாகிஸ்தான் அன்னியநாடு

இன்னொரு மிக முக்கியமான நிகழ்வும் அப்போது நடந்தது. பாகிஸ்தான் பிரதமர் லியாகத் அலிகான் காயிதேமில்லத்திடம்

"இந்திய முஸ்லிம்களுக்கு எந்த ஒரு ஆபத்து நேர்ந்தாலும் அல்லது சிரமங்கள், கஷ்ட, நஷ்டங்கள் ஏற்பட்டாலும்" எனக்கு உடனடியாக தகவல் அனுப்புங்கள்; அந்தத் தகவலை என் பெயருக்கு தந்தி மூலம் அனுப்புங்கள்; உடனடியாக வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக் கொள்கிறோம் என்றார். அந்த இடத்தில் அப்போதே காயிதேமில்லத் சொன்னார்கள். 'பாகிஸ்தான் பிரதமர் அவர்களே இந்திய முஸ்லிம்கள் சிரமத்திற்கோ துன்பத்திற்கோ ஆளாக நேர்ந்தாலும் அதை இந்திய முஸ்லிம்களாகிய நாங்களே எதிர் நோக்கிக் கொள்வோம். சமாளித்துக் கொள்வோம். அந்த உதவி மிகப்பெரியதாகவோ அல்லது மிகவும் சிறியதாகவோ இருந்தாலும் கூட அந்த உதவியை ஒரு அன்னிய நாட்டிலிருந்து பெற நாங்கள் விரும்பவில்லை. எக்காலமும் விரும்பவும் மாட்டோம்; எங்களை மறந்துவிடுங்கள். நீங்கள் வேறு நாங்கள் வேறு. இருவருக்குமிடையில் இனி எந்தவிதத் தொடர்பும் இருக்கப் போவதில்லை.

ஹிந்துக்களுக்கு உதவுங்கள்

எங்களுக்கு உதவி செய்வதைவிட உங்கள் நாட்டில் வாழ்ந்து வரக்கூடிய சிறுபான்மையினருக்கு (ஹிந்துக்களுக்கு) எல்லா வகையிலும் உதவி செய்யுங்கள். அவர்கள் கண் கலங்கி நிற்காமல் அவர்களுடைய சந்தோஷத்திற்குப் பக்கதுணையாக இருந்து எல்லா வகையிலும் பாதுகாவலர்களாக இருந்து வாருங்கள். அவர்களுக்கு நீங்கள் செய்யும் உதவியே இந்திய முஸ்லிம்களுக்கு நீங்கள் செய்யவிரும்பும் பேருதவியாக இருக்கும் என்று காயிதேமில்லத் பாகிஸ்தான் பிரதமர் லியாகத்அலிகானிடம் கூறி முடிப்பதற்குள் அவரது கண்களிலிருந்து கண்ணீர் வடிந்தது. காயிதேமில்லத்தின் கரங்களைப் பிடித்து பாகிஸ்தான் பிரதமர் முத்தமிட்டார். எண்ணிப்பாருங்கள் காயிதேமில்லத்தின் சமுதாய அக்கறை.

பாகிஸ்தான் இந்து ஆலயத்தில் வழிபாடு

அரசாங்கக் கணக்குப்படி பாகிஸ்தானில் 75 இலட்சம் ஹிந்துக்கள் வாழ்கிறார்கள். பொதுக்கணக்கெடுப்பின்படி 90 இலட்சம் ஹிந்துக்கள் பாகிஸ்தானில் வாழ்கிறார்கள். பாகிஸ்தான் சியால்கோட் நகரின் தாரோவால் பகுதியில் "ஷாவாலாதேஜாசிங்' என்னும் ஆயிரம் ஆண்டு பழமையான ஹிந்து ஆலயத்தில் தற்போது வழிபாடு நடக்கிறது. அப்பகுதியில்

வாழும் 2000 ஹிந்துக்கள் மகிழ்ச்சியடைந்துள்ளார்கள். இனபேதம் பேசுவோர் அறிந்து கொள்ள வேண்டிய வரலாற்று நிகழ்வு இது.

அரசியல் நிர்ணயசபையில் ஆட்சிமொழி தமிழ் முழக்கம்

9.12.1946இல் இந்திய அரசியல் நிர்ணய சபை தில்லியில் கூடியது. 296 உறுப்பினர்களில் 207 பேர்கள் ஆஜராகியிருந்தார்கள். துவக்கத்தில் இதில் பங்கேற்காத முஸ்லிம் லீக் கட்சியினர் இந்திய விடுதலைக்குப்பின் பங்கேற்றனர் போக்கர் சாகிப், மஹ்பூப் அலி சாகிப், கே.டி.எம். அகமது இப்ராஹிம் உறுப்பினர்கள். இன்னொரு உறுப்பினரான ஹாஜி அப்துல் சத்தார் இஷாக் சேட் தனது பதவியை ராஜினாமா செய்து 28.4.1948இல் பாகிஸ்தானுக்குச் சென்றார். அந்த காலியிடத்திற்கு 20.7.1948இல் காயிதேமில்லத் தேர்வானார்.

தமிழுக்கு ஆபத்து சூழ்ந்துள்ள இன்றைய நிலையில் 14.9.1949இல் அரசியல் நிர்யண சபையில் தேசியமொழிப் பிரச்சினை விவாதத்தில் காயிதேமில்லத் உரையாற்றும்போது, "நான் ஒரு உண்மையை இச்சபை முன்பு தைரியமாகக் கூற விரும்புகிறேன். இந்நாட்டு மண்ணில் பேசப்பட்ட மொழிகளில் மிகவும் பழமையானதும் ஆரம்ப காலத்தில் இருந்து பேசப்பட்டுவரும் மொழியாக இருப்பதும் தமிழ்தான். அதாவது திராவிட மொழிகளே. இந்நாட்டின் புராதன மொழி என நான் துணிந்து கூறுவேன். இந்நாட்டு மண்ணில் பேசப்பட்ட முதல் மொழி திராவிடமொழியே என்ற எனது கூற்றை எந்த வரலாற்றாசிரியராலும் மறுக்க முடியாது. எந்த புதைபொருள் ஆராய்ச்சியாளராலும் எதிர்க்க முடியாது.

தேசிய மொழி தமிழ் – எனது தாய் மொழி

உயர்தரமான இலக்கிய வளங்களும் நயங்களும் நிறைந்த மொழி தமிழ். இது மிகவும் புராதனமான மொழி. இது எனது தாய்மொழி என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். அம்மொழியை நான் நேசிக்கிறேன். அம்மொழியைப் பற்றி நான் பெருமைப்படுகிறேன். பழமைக்குத்தான் செல்லவேண்டுமென்றால் புராதனமானதைத்தான் தேர்ந்தெடுக்க வேண்டுமெனில், இந்த நாட்டின் தேசிய மொழியாகத் தமிழைத்தான் ஏற்றுக்கொள்ள வேண்டும்" *என்று முழுங்கியவர் காயிதேமில்லத்.*

(Draft Constitution, XIVA Languges Page 1471 to 1474, 14.9.1949 Volume IX)

நீ நாளை முதல் கல்லூரிக்குச் செல்லாதே

1946இல் பிரகாசம் மந்திரிசபை. பின்னர் ஓமந்தூர் ராமசாமி மந்திரிசபை. இவைகளில் கல்வி அமைச்சர் தி.சு. அவினாசிலிங்கம் செட்டியார். ஒரு நாள் சட்டசபை லாபியில் காயிதேமில்லத்தைப் பார்த்து 'உங்கள் மகன் இஞ்சீனியரிங் கல்லூரியில் நன்றாகப் படிக்கிறானா?' என்று கேட்டார். 'என் மகன் அங்கு படிப்பது உங்களுக்கு எப்படித் தெரியும் என்றார் காயிதேமில்லத்'. 'நான் தான் அட்மிஷன் போட்டேன்' என்றார் கல்வி அமைச்சர். அமைச்சரின் பரிந்துரையை விரும்பாத நிலையில் வீட்டுக்கு வந்த காயிதேமில்லத் மகனை அழைத்து 'நாளை முதல் நீ கிண்டி கல்லூரிக்குப் போக வேண்டாம்' என்று சொன்னார்கள்.

தந்தை சொல்மிக்க மந்திரம்இல்லை
அதிலிருந்து மகனும் கல்லூரிக்குச் செல்லவில்லை.

இதுதான் காயிதேமில்லத்.

மாநிலங்களவை உறுப்பினராக

1952 பொதுத்தேர்தல்; முஸ்லிம் லீக் தமிழகத்தில் ஒரு இடத்தில் கூட வெற்றிபெறவில்லை. மலபாரில் ஒரு நாடாளுமன்ற உறுப்பினர், ஐந்து எம்.எல்.ஏ.க்கள். மாநிலங்களவைத் தேர்தல். தமிழகத்திலிருந்து 18 பேர்கள் சுழற்சி முறையில் தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய நிலை. குலுக்கல் முறை முதல் ஆறு உறுப்பினர்களுக்கு இரண்டு வருடம். அடுத்த ஆறு உறுப்பினர்களுக்கு நான்கு வருடங்கள்; எஞ்சிய ஆறு உறுப்பினர்களுக்கு ஆறு வருடங்கள் பதவி. அன்று 1952இல் முழுக்க முழுக்க சுயேட்சை உறுப்பினர்கள் ஆதரவுடன் மாநிலங்களவைக்குச் சென்றவர் காயிதேமில்லத்.

வாடகை வீட்டில் வாழ்ந்த வரலாற்று நாயகர்

காயிதேமில்லத் 1939 இல் எக்மோர் இரயில்நிலையம் எதிரில் காந்தி – இர்வின் சாலை டிவோனியா ஹவுஸ் பங்களாவில் குடியிருந்தார். இரண்டாம் உலகப்போர் – பெரும் தொழில் நஷ்டம் பங்களாவை காலி செய்துவிட்டு 1940 பெரம்பூர் ஜமாலியா காம்பவுண்டில் வாடகை வீட்டில் குடியேறினார். 1940இல் சந்தோம் நெடுஞ்சாலை வாடகை வீட்டில், 1949

ராயப்பேட்டை கார்டல் தெருவில் வாடகை வீட்டில் வசித்தார்கள். மாமனார் எம்.ஜெ. அப்துல்லா சாஹிப், மண்ணடி முத்தியாலுபேட்டையில் தோல் வணிகம், ஆடுதுறையில் விவசாயம் கோடீஸ்வரர். 5.6.1950 இல் மறைவு. அவரது மகளும் காயிதேமில்லத் மனைவியுமான ஹமீதாபீவியின் பாகத்திற்கு கிடைத்த நிலத்தை விற்று 25.4.1955இல் குராம்பேட்டையில், ஐந்து கிரவுண்டு நிலத்தை இரண்டாயிரம் ரூபாய்க்கு வாங்கி (பத்திரங்கள் 638, 639 ஆப் 1955) சிறுகச் சிறுக வீடு எழுப்பி 26.5.1957இல் குராம்பேட்டை வீட்டில் குடியேறிய கொள்கைச் செம்மல் காயிதேமில்லத். 27.7.1962இல் துணைவியார் மறைந்தார்.

சீனப்போரிலே யுத்தநிதி முதலில் வழங்கியவர்

மனைவி மறைந்த மூன்று மாதத்தில் சீனப்போர், 27.10.1962இல் தனது சம்பளத்தில் மாதம் ரூபாய் நூறு பிடித்துக்கொள்ளலாம் என்று முதலில் பிரதமர் நேருவிற்கு கடிதம் எழுதியதோடு அவ்வாறு தொடர்ந்து யுத்த நிதியும் தந்தவர் காயிதேமில்லத்.

புத்ரதான் தினம் – நாட்டிற்கு மகனைத் தந்தவர்

13.11.1962 புதுதில்லி 'மெயில்' பத்திரிகையில் ஏழு எம்.பி.க்கள் புத்ரதான் தினம் பற்றிய செய்தி. தங்களது புதல்வர்கள் நாட்டு நலனுக்கு அளித்திட பண்டிதநேருவிற்கு அறிவித்த நிகழ்வு. 16.11.1962 இல் தனது புதல்வர் மியாகானை தாங்கள் இராணுவத்தில் எந்தப் பணியிலும் பயன்படுத்திக் கொள்ளலாம் என்று காயிதேமில்லத் கடிதம் எழுதிட, 17.11.1962இல் காயிதேமில்லத்திற்கு நேரு பதில் கடிதம் எழுதிட, அதன்படி சென்னை இராணுவகேந்திரத்திற்கு மியாகான் செல்ல, முப்பது வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு இராணுவத்தில் பணிவாய்ப்பு, வழங்கப்படமாட்டாது என்பதால் திரும்பினார் மியாகான். (மியாகான் பிறப்பு 10.10.1925, 1962இல் அப்போது அவருக்கு வயது 37, 1927இல் பஹ்மீதா என்ற மகள் பிறந்து மறைந்தார்)

அலுவலக ஊழியர் மீராசாவின் செருப்பைச் சுமந்தவர்

சென்னை மரக்காயர் லெப்பை தெரு முஸ்லிம் லீக் ஆபீஸ் ஊழியர் மீராசா காயிதேமில்லத்தின் பெட்டியைத் தூக்கி வருகிறார். அவரது செருப்பு அறுந்து விடுகிறது 3 படிகள் கீழே

இறங்கிய நிலை. காயிதேமில்லத் அவரது செருப்பை தனது கரங்களில் தூக்கிக் கொண்டு வந்தார். ஊழியர் பதைபதைத்தார். **'என் பெட்டியை நீங்கள் தூக்குகிறீர்கள் உங்கள் பொருளை நான் எடுத்து வருகிறேன்'** இதில் என்ன சிரமம் என்ற எளிமையின் திருஉருவம் காயிதேமில்லத்.

அறிஞர் அண்ணா

அறிஞர் அண்ணா மாநிலங்களவை உறுப்பினர், அப்துஸ்ஸமதுவும் 1964இல் மாநிலங்களவை உறுப்பினர். காயிதேமில்லத் மக்களவை உறுப்பினர். டில்லி நோக்கி இரயில் பயணம். அண்ணாவிடம் 'பொடி' தீர்ந்துபோனது. அப்துஸ்ஸமதை அழைத்து கொஞ்சம் பொடி காயிதேமில்லத்திடம் வாங்கித் தாருங்கள் என்றார். அப்துஸ்ஸமது காயிதேமில்லத் படுத்திருந்த இடத்தில் துழாவுகிறார்.

நேரில் வந்து தருவது முறை

சப்தம் கேட்டு விழித்த காயிதேமில்லத் விஷயத்தை விளங்கிக் கொண்டு பொடி டப்பாவை எடுத்துக்கொண்டு தானே நேரில் சென்று அண்ணாவிடம் வழங்கினார். ஸமதிடம் கொடுத்தனுப்பியிருக்கலாமே என்று அண்ணா சொன்னபோது நானே நேரில் வந்து தருவது முறை என்று கூறிய பண்பாளர் காயிதேமில்லத், பதிலுக்கு உங்களுக்கு பொடி என்று அண்ணா கேட்டபோது என்னிடம் இன்னொரு டப்பா உள்ளது என்று பதிலளித்தவர் காயிதேமில்லத். தொண்டர் மீராசாவிடவும் தலைவர் அண்ணாவிடமும் நடந்து கொண்ட முறை எத்தகைய பண்பாளர் காயிதேமில்லத்!

மாசுமருவற்ற தேசபக்தி – இந்திய அரசின் ஆஸ்பத்திரியில்

காயிதேமில்லத் ஹஜ் யாத்திரையின்போது சவுதி அரசர் தமது விருந்தினர் மாளிகையில் தங்க அழைத்தபோதும் சென்னையைச் சேர்ந்த அப்துல்ரகுமான்ஷில்லி வீட்டிலேயே தங்கிய பெருந்தகையாளர் காயிதேமில்லத். காயிதேமில்லத்திற்கு கடுமையான காய்ச்சல், மயங்கும்நிலை, சவூதி அரசின் மருத்துவமனையில் நவீன மருத்துவர், வெளிநாட்டு ஸ்பெஷலிஸ்டுகள் உள்ளனர்,. அங்கு அழைத்துச் செல்லலாம் என்றனர் சிலர். பாகிஸ்தான் அரசு மக்காவில்

நடத்தும் மருத்துவமனையில் சிறந்த மருத்துவ நிபுணர்கள் அங்கு போகலாம் என்றனர் சிலர், சிறிது மயக்கம் தெளிந்த காயிதேமில்லத் **என்னை இந்திய அரசு நடத்திடும் ஆஸ்பத்திரியில் சேருங்கள்** என்றார். வெளிநாடுகளில் தூதர் அலுவலகங்கள் அந்தந்த நாட்டு மண்ணில் நடைபெறும் காரியங்களுக்கு ஒப்பானதாகும் இதுதான் உலகநாடுகள் கடைப்பிடிக்கும் சம்பிரதாயம். எனவே அந்நிய மண்ணில் இந்திய ஆஸ்பத்திரியில் நான் மரணம் அடைய நேரிட்டால் அது இந்திய மண்ணில் நடந்த மாதிரி என்றார் காயிதேமில்லத். காயிதேமில்லத்தின் தேசப்பற்று மாசுமருவற்றது. உறுதியில் ஈமானில் பாதி நாட்டுப்பற்று என்ற நபிகள் நாயகம் (ஸல்) வாக்கின்படி வாழ்ந்து காட்டியவர் காயிதேமில்லத்.

இறுதிக்கால இருப்பு

" நாம் எந்தக் கட்சியை ஆதரித்தாலும் சரி எதனுடனாவது கூட்டுச் சேர்ந்தாலும் சரி இந்த நாட்டிற்கு நன்மை பயக்குமாறு யோசித்தே முஸ்லிம் லீக் கட்சி முடிவுகளை எடுக்கிறது என்றுரைத்திட்ட காயிதே மில்லத் மறைந்தபோது அவரது துருக்கி தொப்பி, கண்ணாடி, ஓதிவந்த மணிமாலை (ஜெபமாலை) தொழுகை விரிப்பு, உடுத்தி இருந்த துணிகள் இவையே அவரது இருப்பு.

பேராசிரியர் கா.அப்துல் கபூர்

உறுதிபடைத்த நெஞ்சமுடன் உயரிய பண்புகள் பூண்டவராம் இறுதிவரையில் நன்னெறியை இறுகப்பிடித்த நல்லவர் காயிதேமில்லத் என்று இறையருட்கவிமணி பேராசிரியர் கா. அப்துல் கபூர் வாழ்த்துவார்.

சீர்காழி இறையன்பன்

'வித்தகத்தில் சத்தியத்தின் முத்திரையை பதியவைத்து விடிவெள்ளி' மாண்புக்கு படியமைத்த பண்பாளர் காயிதேமில்லத் என்று சீர்காழி இறையன்பன் போற்றுவார்.

தா.காசிம்

ஏழ்மைக்குள் நிறைவுற்ற பொதுமை வாழ்வும் இறைமுன்னே கையேந்தும் ஒற்றை நோன்பும் தாழ்வுற்றோர் வாழ்வுக்காய்பிணித்த



M. MUHAMMAD ISMAIL, M. P.
PRESIDENT,
INDIAN UNION MUSLIM LEAGUE

Phone: 89377
DAYA MANZIL
CHROMEPET
(Via) MADRAS
.........196

5, Western Court
New Delhi. 16/ /62.

My dear Miakhan,
Va alaikumus Salaam va Rahmathullahi va barakatthuhu!

I received today your letter of the 14th instant and was overwhelmed with devout feelings of gratitude to Allah the Almighty and with an exhilarating sense of pride at what you have written. Alhamdulillah!

I have forwarded your letter to the Hon'ble Prime Minister, placing your beautiful offer at his disposal. Your spontaneous letter itself is a noble action.

May the Almighty Allah shower His choicest blessings upon you and yours! Ameen

Yours affectionately,
M. Md. Ismail

To J. M. Miakhan,
Chromepet.

காயிதேமில்லத்தின் ஆங்கிலக் கையெழுத்து

प्रधान मत्री भवन
PRIME MINISTER'S HOUSE
NEW DELHI

No. 1990-PMH/62

November 17, 1962

Dear Mr. Muhammad Ismail,

Thank you for your letter of the 16th November. I have read the copy of your son's letter with pleasure. It does him credit and I congratulate you on having such a gallant son.

I think that it will be far better if he finds some work connected with the war effort in Madras. The crisis we are facing is likely to last for a considerable time and everyone of us will have to give our best to it.

I am returning your son's letter.

Yours sincerely,

Jawaharlal Nehru

பிரதமர் பண்டித நேரு காயிதேமில்லத்திற்கு எழுதிய கடிதம்


M. MUHAMMAD ISMAIL, M.P.
PRESIDENT:
INDIAN UNION MUSLIM LEAGUE

Camp:
C/o. Janab Syed Abdul Rahman Bafakyh Thangal,
Post Box 152, Calicut. 1.

“DAYA MANZIL”
CHROMEPET
MADRAS-44.

19-4-69.

[illegible] A.K. [illegible]
[illegible]
உடலைக் கவனித்துக் கொள்ளும்படி —
[illegible]
[illegible] Cannanore [illegible]
Tourist Bungalow [illegible]
[illegible] T.P. [illegible]
[illegible] Trunk Call [illegible]
[illegible] (Exp.) [illegible] —

காயிதேமில்லத்தின் கடும் உழைப்புபற்றிய தமிழ்க்கடிதம்


Calicut
West Coast Express

நெஞ்சும் தாக்கினாரில் தகவுரைக்கும் தனிமை நோக்கும் வீழ்ந்தாரை உயர்த்துகின்ற வெற்றிப்போக்கும் வீம்பரில் சாம்பாத இனிய சொல்லும் பால்பார்க்கும் முகம்பெற்ற தலைவர்! *என்று பிரியத்திற்குரிய அண்ணன் தா. காசிம் போற்றுவார் காயிதேமில்லத்தை.*

வீரை அப்துல் ரகுமான்

சாடிய பகையை நீக்கி
சீரிய வழியைக்காட்ட
தேடிய தலைவராக
காயிதேமில்லத் வந்தார்

என்று எனது கெழுதகை நட்பின் அண்ணன் வீரையார் எம்.அப்துல்ரகுமான் வாழ்த்துவார்.

இளையான்குடி – சண்முகம்

'இந்தியா சுதந்திர மகுடம்சூட ஏந்தவர் காந்தியோடு பாடுபட்டீர் சந்தனமே! மறக்குமா? எங்கள் நெஞ்சம் சந்தோஷமாலையிட நாளும் கெஞ்சும்' *என்று இளையான்குடி மு.சண்முகம் இதயம் மகிழ்ந்து பாராட்டுவார்.*

கவிஞர் திலகம் சாரண பாஸ்கரன்

நெஞ்சத்தை அகந்தையினால் நிரப்பி நின்றார்
நிலைகுலையச் செய்கின்ற வித்தை செய்து
வஞ்சத்தின் துணையாலே ஏய்த்து நின்ற
வல்லரக்கன் ஆதிக்கம் சாய்த்து, வென்று
அஞ்சி அஞ்சி அடிமை என வாழ்ந்த மக்கள்
ஆர்ப்பரித்து ஏழவைத்து உரிமைகாத்து
துஞ்சி நின்ற சமுதாயத்தை விழிக்கவைத்திட
தொண்டாற்றியவர் காயிதே மில்லத்.

இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தலைவர்

காயிதேமில்லத் எம். முஹம்மது இஸ்மாயில் சாஹிப் 10.3.1948 முதல் 5.4.1972 வரை இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தலைவராக பணியாற்றினார்கள்.

14.5.72 – 1973 வரை ஹகீமுல் மில்லத் சையத் அப்துர் ரஹ்மான் பாகவி தங்கள், 1973லிருந்து 7.2.1994 வரை மஹ்பூபே மில்லத் இப்ராஹீம் சுலைமான் சேட் சாகிப், 7.2.1994 முதல் 25.6.2008 வரை முஜாஹூதே மில்லத் G.M. பனாத்வாலா. 14.9.2008 முதலும் அதன் பிறகு இ.அஹமது.

பேராசிரியர் கே.எம். காதர் மைதீன்

அவரைத் தொடர்ந்து தற்போது பேராசிரியர் கே.எம். காதர் மைதீன் அகில இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தலைவராகச் செயலாற்றி வருகிறார்கள்.

தொகுதிக்குச் செல்லாமலே நாடாளுமன்ற உறுப்பினராக

சட்டமன்ற உறுப்பினராக, அரசியல் நிர்ணயசபை உறுப்பினராக, நாடாளுமன்ற மாநிலங்களவை உறுப்பினராக, நாடாளுமன்ற மக்களவை உறுப்பினராக, 1962, 1967, 1971 ஆண்டுகளில் மஞ்சேரி தொகுதியில் மூன்றுமுறை தேர்ந்தெடுக்கப்பட்டவர். 1971 தேர்தலில் காயிதேமில்லத் பெற்ற வாக்குகள் 1,71,495. E.P.M. அலி பெற்றது 51,659. எவ்வளவு பெரிய வாக்கு வித்தியாசத்தில் வெற்றிபெற்ற தலைவராக வாழ்ந்தவர் காயிதேமில்லத்.

எளிமையின் மறுஉருவம் – குதிரை வண்டியில்

டெல்லியில் பாராளுமன்ற நிகழ்ச்சி முடிந்ததும் சென்னை சென்ட்ரலுக்கு இரயிலில் பயணித்து, பின் அங்கிருந்து எலக்டிரிக் ரயிலில் குராம்பேட்டைக்குச் சென்று பின் அங்கிருந்து குதிரை வண்டியில் இல்லத்திற்குச் செல்லும் எளிமையின் மறுஉருவம் காயிதேமில்லத்.

தந்தை பெரியார்

'இப்படிப்பட்ட தலைவர் கிடைப்பது அரிது; நல்ல உத்தம மாமனிதர், முஸ்லிம் சமுதாயத்திற்கு இவரைப் போன்ற தலைவர் கிடைப்பது கஷ்டம்' *என்று தந்தை பெரியாரால் பாராட்டப்பபெற்றவர் காயிதேமில்லத்.*

அறிஞர் அண்ணா

நாடாளுமன்ற மைய மண்டபத்தில் அண்ணா கழகத் தோழர்களுடன் அமர்ந்திருந்தபோது, நாஞ்சில் கி. மனோகரன் அறிஞர் அண்ணாவிடம் 'அண்ணா, எனக்கு இஸ்ரேல் அரசின் அழைப்பு வந்திருக்கிறது போக அனுமதிக்கிறீர்களா! என்று கேட்டார்.

கொள்கையாளர் – குணத்தின் குன்று

நீ இஸ்ரேலுக்கு போவாயோ, எகிப்து நாட்டுக்குச் செல்வாயோ உன் இஷ்டம். **நான் இஸ்மாயில் சாஹிப் அவர்களோடுதான் இருப்பேன் என்றார் அறிஞர் அண்ணா.** *1962 முதல் அறிஞர் அண்ணாவோடு உறவுகொண்டு, தன் இறுதிமூச்சுவரை கொள்கையாளராக வாழ்ந்து மறைந்த குணத்தின் குன்று காயிதேமில்லத்.*

நாட்டின் இரு கண்கள்

'நாட்டின் இரு கண்கள் அறிஞர் அண்ணாவும், காயிதேமில்லத்தும்' *என்று இசைமுரசு நாகூர் இ.எம். ஹனீபாவின் கம்பீரக்குரலில் கானமிசைத்து போற்றப்பட்டவர் காயிதேமில்லத்.*

மூதறிஞர் ராஜாஜி

என்னுடைய ஹிந்து – முஸ்லிம் ஒற்றுமை கொள்கைக்கு முழு ஆதரவு கொடுத்த சிறந்த நண்பர் காயிதேமில்லத். இஸ்மாயில் சாஹிபை நான் அதிகம் சந்தித்தது கிடையாது, ஆனால் கொள்கை அளவில் இருவருமே சந்தித்துள்ளோம்.

– ராஜாஜி 6.4.1972 தினந்தந்தி.

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்.

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். தேர்தலில் போட்டியிட்ட பரங்கிமலை தொகுதியின் வாக்காளர் காயிதேமில்லத். இருமுறையும் சட்டமன்றத் தேர்தலில் தனது வாக்கினை புரட்சித்தலைவர் எம்ஜி.ஆருக்குச் செலுத்தியவர் காயிதேமில்லத்.

நடந்தே சென்ற எம்.ஜி.ஆர்.

குராம்பேட்டை வீடு – புதுக்கல்லூரி பள்ளிவாசல் அங்கிருந்து வாலாஜா பள்ளிக்கு **காயிதேமில்லத்தின் இறுதி ஊர்வலத்தில் அன்றைய தி.மு.க. பொருளாளர் எம்.ஜி.ஆர். நடந்தே சென்றார்** *என்பதை தினந்தந்தி 6.4.1972 முதற்பக்கத்தில் சுட்டிக் காட்டி எழுதியிருந்தது.*

பெருந்தலைவர் காமராஜர்

" இந்த நாடும் நாமும் வாழ காயிதேமில்லத்தின் எளிமையையும், ஒழுக்கத்தையும் அரசியல்வாதிகள் கடைப்பிடிக்க வேண்டும்."

– சீதக்காதி நகர் கூட்டத்தில்
பெருந்தலைவர் கு. காமராசர்.

கலைஞர் கருணாநிதி

"இந்த நாட்டின் ஜனாதிபதியாக யாரை நியமிக்கலாம் என்ற கேள்வி எழும்போது என் மனம் காயிதேமில்லத்தையே நினைக்கும்"

– சென்னை S.I.A.A. மைதானத்தில் நடைபெற்ற
இந்திய யூனியன் முஸ்லிம் லீக்
பொதுக்கூட்டத்தில் கலைஞர் கருணாநிதி.

மரண வேளையிலும் கலைஞரின் கரத்தைப் பிடித்தவாறு காயிதேமில்லத் கனிந்துருகச் சொன்ன வார்த்தைகள் சமுதாயத்திற்கு திராவிட இயக்கத்தின் பாதுகாப்பாகும்.

ஆருயிர்த்தலைவர்

ஆருயிர்த் தலைவர் காயிதேமில்லத்
அரசியல் பெருமேதை
அவரே முகம்மது இஸ்மாயில்
தலைவர் முகம்மது இஸ்மாயில்

கருத்தினில் ஆழம் கண்களில் கருணை
கடமையில் நேர்மை நிலவிடும் தீரர்
கண்ணியம் கட்டுப் பாடெனும் வழியில்
கடுகளவேனும் மாறுபடாதோர் !

திறமையில் தமக்குத்தாமே உவமை
திகழும் அறிவுடையோர் (அவரே)

சத்திய வாழ்க்கை லட்சியமாக
சார்ந்து உழைத்திடும் உத்தமவீரர் !
சமூகம் கோரும் சேவையில் தமது
சக்தியை செலவு செய்திடும் ஒருவர் !
எத்துணை துன்பம் நேரினும் அஞ்சா
எழுச்சிகொள் பண்பாளர் (அவரே)

வஞ்சகர் சூழ்ச்சியைப் புன்னகையாலே
வீழ்த்திடும் கல்வி வல்லமை உடையோர் !
வாழ்வின் ஏழை படுந்துயர் கண்டால்
வருந்தியே கண்ணீ ர் வடித்திடும் சீலர்!
நெஞ்சுரத்தோடு நிமிர்நடை போட்ட
நெடுமதி திறனாளர் (அவரே)

– புலவர் ஆபிதீன்

மனிதரில் சிறந்தவர்

"அதிகாரத்திற்கும் ஆதிக்கத்திற்கும் ஆசைப்படாதவரேற மனிதரில் சிறந்தவர்" என்ற அண்ணல் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பொன்மொழிக்கு தானே சான்றாக இருந்து காலமெல்லாம், நாட்டிற்கு உழைத்திட்ட நல்லவர் சிறந்தவர் காயிதேமில்லத் புகழ் நிலைத்து நிற்க கருணை உள்ள இறைவன் அருள்வானாக!

தமிழக அரசு காயிதே மில்லத் பிறந்த திருநெல்வேலி மாவட்டம் பேட்டையில் நினைவு இல்லம் அமைத்திட ஆவன செய்யுமாறு வேண்டுகிறோம்.

தமிழுக்கு ஆபத்து சூழ்ந்துள்ள இன்றைய நிலையில் 14.9.1949இல் அரசியல் நிர்யண சபையில் தேசியமொழிப் பிரச்சினை விவாதத்தில் காயிதேமில்லத் உரையாற்றும்போது, "நான் ஒரு உண்மையை இச்சபை முன்பு தைரியமாகக் கூற விரும்புகிறேன். இந்நாட்டு மண்ணில் பேசப்பட்ட மொழிகளில் மிகவும் பழமையானதும் ஆரம்ப காலத்தில் இருந்து பேசப்பட்டுவரும் மொழியாக இருப்பதும் தமிழ்தான். அதாவது திராவிட மொழிகளே. இந்நாட்டின் புராதன மொழி என நான் துணிந்து கூறுவேன். இந்நாட்டு மண்ணில் பேசப்பட்ட முதல் மொழி திராவிடமொழியே என்ற எனது கூற்றை எந்த வரலாற்றாசிரியராலும் மறுக்க முடியாது. எந்த புதைபொருள் ஆராய்ச்சியாளராலும் எதிர்க்க முடியாது.

தேசிய மொழி தமிழ் - எனது தாய் மொழி

உயர்தரமான இலக்கிய வளங்களும் நயங்களும் நிறைந்த மொழி தமிழ். இது மிகவும் புராதனமான மொழி. இது எனது தாய்மொழி என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். அம்மொழியை நான் நேசிக்கிறேன். அம்மொழியைப் பற்றி நான் பெருமைப்படுகிறேன். பழமைக்குத்தான் செல்லவேண்டுமென்றால் புராதனமானதைத்தான் தேர்ந்தெடுக்க வேண்டுமெனில், இந்த நாட்டின் தேசிய மொழியாகத் தமிழைத்தான் ஏற்றுக்கொள்ள வேண்டும்" என்று முழுங்கியவர் காயிதேமில்லத்.

(Draft Constitution, XIVA Languges Page 1471 to 1474, 14.9.1949 Volume IX)

NEWSMAN
Publications

விலை ₹ 40

Cover design: PR Rajan